திருநங்கைகள் – பாலின சிறுபான்மையினர்களுக்கான சுகாதார விழிப்புணர்வு :

# தமிழ்நாட்டிடமிருந்து ஒன்றிய அரசு பாடம் கற்றுக் கொண்டதா?

## மக்களவையில் நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி கேள்வி!



**புதுடெல்லி, டிச. 15 –**

**திருநங்கைகள், பாலின சிறுபான்மையினருக்கான சுகாதார விழிப்புணர்வு குறித்து தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், தி.மு.க. நாடாளுமன்ற குழு தலைவருமான கனிமொழி கருணாநிதி எம்.பி. எழுத்துப்பூர்வமாக கேள்விகளை எழுப்பினார்.**

“தமிழ்நாடு மருத்துவ கவுன்சில் அண்மையில், “மாநிலத்தில் உள்ள அனைத்து மருத்துவர்கள், மருத்துவ கல்வியாளர்கள் மற்றும் மருத்துவ மாணவர்களுக்கு திருநங்கைகள் சுகாதாரம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு கட்டாய பயிற்சி அளிக்க வேண்டும்” என வழிகாட்டியுள்ளது. இது குறித்து ஒன்றிய அரசு அறிந்துள்ளதா?

ஒன்றிய அரசின் நிர்வாகத்தில் உள்ள மத்திய மருத்துவக் கல்லூரிகள் மற்றும் சுகாதார நிறுவனங்களில் இது போல திருநங்கைகள் சுகாதாரம் பற்றிய விழிப்புணர்வு பயிற்சி அமர்வுகளை கட்டாயமாக்கி உள்ளதா?

அப்படியானால் அத்தகைய அமர்வுகள் நடத்தப்பட்டதன் விவரங்கள் மாநிலம், யூனியன் பிரதேசங்கள் வாரியாக என்ன?

பாலின சிறுபான்மையினருக்கான மருத்துவ மற்றும் சுகாதாரம் தொடர்புடைய விரிவான பயிற்சி அமர்வுகளைத் தொடங்க அரசாங்கத்தால் ஏதேனும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதா அல்லது எடுக்க முன்மொழியப்பட்டுள்ளதா?

அப்படியானால், அதன் விவரங்கள் மற்றும் இல்லையென்றால், அதற்கான காரணங்கள் என்ன?” என்று கனிமொழி கருணாநிதி கேள்விகளை எழுப்பி இருந்தார்.

இந்தக் கேள்விகளுக்கு ஒன்றிய சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை இணை அமைச்சர் அனுப்ரியா பட்டேல் பதிலளிக்கையில்,

“நாட்டில் மருத்துவக் கல்வியை ஒழுங்குபடுத்தவும் மேற்பார்வையிடவும் நாடாளுமன்றச் சட்டத்தால் உருவாக்கப்பட்ட ஒரு உச்ச சட்டப்பூர்வ அமைப்பாக தேசிய மருத்துவ ஆணையம் (NMC) செயல்படுகிறது.

இளநிலை மருத்துவ மாணவர்களுக்காக 2024 ஆம் ஆண்டில் தேசிய மருத்துவ ஆணையம் திறன் அடிப்படையிலான மருத்துவக் கல்வி (CBME) வழிகாட்டுதல்களை வெளியிட்டுள்ளது.

இதன்படி அடிப்படை நெறிமுறை மதிப்பீடுகள், நோயாளியை மையமாகக் கொண்ட பொறுப்புணர்வு, பயனுள்ள தகவல் தொடர்பு திறன் மற்றும் பாலின உணர்திறன் ஆகியவற்றின் முக்கியத்துவம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இந்தத் திறன்களை வளர்ப்பதற்காக, AETCOM என்ற தலைப்பில் ஒரு பிரத்யேக பாடத்திட்டம் இடம்பெற்றுள்ளது.

இது நோயாளிகளை அணுகும் முறை, நெறிமுறைகள் மற்றும் தகவல் தொடர்பு ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது.

மேலும், LGBTQA+ சமூகத்தைக் கையாள்வதில் மருத்துவசட்ட, சமூக, நெறிமுறை மற்றும் மனிதாபிமானம் பற்றிய புரிதலை மாணவர்களுக்கு ஏற்படுத்தும் வகையில், மனநல மருத்துவப் பாடத்தின் கீழ் ஒரு தொகுப்பு சேர்க்கப்பட்டுள்ளது.

அடல் பிஹாரி வாஜ்பாய் மருத்துவ அறிவியல் நிறுவனம் மற்றும் டாக்டர் ராம் மனோகர் லோஹியா மருத்துவமனை தெரிவித்தபடி, அம் மருத்துவமனையில், 17.11.2023 முதல் திருநங்கைகளுக்கான புறநோயாளிகள் பிரிவு தொடங்கப்பட்டுள்ளது. இது ஒவ்வொரு வெள்ளிக்கிழமை மாலையும் செயல்பட்டு வருகிறது” என்று பதில் தெரிவித்துள்ளார்.

# தமிழ்நாட்டில் தேசிய ஆயுஷ் மருந்தியல் கண்காணிப்புத் திட்டத்தின் செயல்பாடுகள் என்ன?

## மக்களவையில் தருமபுரி ஆ.மணி கேள்வி!



புதுடெல்லி, டிச. 15–

நாட்டின் கிராமப்புறங் களில் ஆயுஷ் மருந்துகளின் பாதுகாப்பு தன்மை,எதிர்வினை மற்றும் தரம் குறித்து கண்காணிக்க ஒன்றிய அரசு ஏதேனும் நடவடிக்கை எடுத்துள்ளதா? இருப்பின் அது குறித்த விவரங்கள் என்ன?

தமிழ்நாட்டில் தேசிய ஆயுஷ் மருந்தியல் கண்காணிப்பு திட்டத்தின் (PVPA) கீழ் இணைக்கப்பட்டு செயல்பட்டு வரும் ஆயுஷ் மருத்துவமனைகள், பயிற்சி நிறுவ னங்கள் மற்றும் புற அலகுகளின் எண்ணிக்கை என்ன? நாட்டில் தற்போது செயல்படுத்தப்பட்டு வரும் மருந்தியல் கண்காணிப்பு நடவடிக்கைகள் குறித்த விவரங்கள் என்ன?

பாரம்பரிய மருத்துவத்தை அதிகளவு பயன்படுத்தும் பெரிய கிராமபுற மற்றும் பழங்குடி இன மக்களை கொண்டுள்ள தருமபுரி மாவட்டத்தில் பிரத்யோக ஆயுஷ் மருந்தக கண்காணிப்பு மையங்கள் ஏதேனும் இதுவரை நிறுவப்பட்டு ள்ளதா? அல்லது முன்மொழி யப்பட்டுள்ளதா? இருப்பின் அது குறித்த விவரங்கள் என்ன?

கிராமப்புற சுகாதார பணியாளர்கள் மற்றும் ஆஷா பணியாளர்களுக்கு பயிற்சி அளிக்க ஒன்றிய அரசு ஏதேனும் திட்டங் களை செயல்படுத்தி வருகிறதா? தருமபுரி மாவட்டத்தில் உள்ள ஆயுஷ் மருத்துவ பயிற்சியாளர்கள் மருத்துகளின் எதிர்வினைகளை நாட்டில் உள்ள ஆயுஷ் சூத்தி ரங்களுடன் அடையாளம் கண்டு,அது குறித்த முறையான அறிக்கையினை நிர்வகித்து வருகின்றனரா? என்று ஆயுஷ் அமைச்சகத்தின் (ஐ.சி.) அமைச்சர் பிரதாப்ராவ் ஜாதவ்விடம் மக்களவையில் தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் வழக்கறி ஞர். ஆ.மணி கேள்வி எழுப்பி உள்ளார்.



கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டத்தின் விரிவாக்கத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னையில் துவக்கி வைத்ததை முன்னிட்டு, தூத்துக்குடி அறிஞர் அண்ணா திருமண மண்டபத்தில் நடைபெற்ற வெல்லும் தமிழ்ப் பெண்கள் நிகழ்வினை சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் பெ.கீதா ஜீவன், மீன் வளம் மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், துவக்கி வைத்தனர். உடன் சட்டமன்ற உறுப்பினர் ஜீ.வி. மார்க்கெண்டெயன், மாநாகாரட்சி மேயர் ஜெகன் பெரியசாமி, சண்முகையா எம்.எல்.ஏ., மாவட்ட ஆட்சியர் இளம்பகவத், கூடுதல் ஆட்சியர் ஐஸ்வர்யா ஆகியோர் கலந்து கொண்டனர்.

பாளையங்கோட்டையில்

# கலைஞர் மகளிர் உரிமைத் தொகை -2ஆம் கட்ட விரிவாக்கம்!

## சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு பங்கேற்பு!

நெல்லை, டிச. 15 –

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டு அரங்கில் வெல்லும் தமிழ்பெண்கள் நிகழ்ச்சியில் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தின் 2 வது கட்ட விரிவாகத்தினைத் துவக்கி வைத்தார்கள். அதனைத் தொடர்ந்து நெல்லை பாளையங்கோட்டை அரசு பொறியியல் கல்லூரியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் 1000,ம் மகளிர்களுக்கு கலைஞர் மகளிர் உரிமைத் தொகை பெறுவதற்கான வங்கி பரிவர்த்தனை அட்டைகளை சட்டப் பேரவை தலைவர் மு.அப்பாவு மாவட்ட ஆட்சியர் மரு.இரா. சுகுமார் தலைமையில் நெல்லை மேற்கு மாவட்ட பொறுப்பாளர் இரா. ஆவுடையப்பன்,நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் மு.அப்துல் வஹாப் எம்.எல்.ஏ. நெல்லை கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் ம.கிர காம்பெல், முன்னாள் அமைச்சர் மைதீன்கான், மாவட்ட ஊராட்சி மன்ற தலைவர் ஜெகதீஸ்,கிறிஸ்தவ தேவாலயங் களில் பணியாற்றும் உபதேசியார் கள் மற்றும் பணியாளர்கள் நலவாரிய தலைவர் விஜலா சத்தியானந்த் ஆகியோர் முன்னிலையில் வழங்கினார்கள்.

பின்னர் சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது.

இந்தியாவிலேயே முதன் முதலாக தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் கலைஞர் மகளிர் உரிமைத்தொகை என்ற திட்டம் தொடங்கப்பட்டு தகுதியான நபர்களுக்கு கொடுக்கப்பட்டு வருகிறது.இதுவரை 1 கோடியே 13 லட்சத்திற்கும் மேற்பட்டவர்களுக்கு மாதம் 1000,ம் ரூபாய் மகளிர் உரிமை தொகை வழங்கப்பட்டுள்ளது. தொடர்ந்து 28 மாதங்களாக இந்த திட்டத்தில் உரிமை தொகை வழங்கப்பட்டுள்ளது.இதில் விடுபட்ட வர்களுக்கும் கொடுக்க வேண்டும் என்பதற்காக தமிழகம் முழுவதும் 16 லட்சம் விண்ணப்பங் கள் பெறப்பட்டு மகளிர் உரிமைத் தொகை கொடுக்கப்படுகிறது. நெல்லை மாவட்டத்தில் மட்டும் 44 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர் களுக்கு இந்த வாய்ப்பை வழங்கிய முதலமைச்சர் அவர்களுக்கு நெல்லை மாவட்டம் சார்பாக நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

தேர்தல் ஆணையம் நடவடிக்கையில் பா.ஜ.க அரசு தலையிடாது என்பது உண்மைதான் ஏனென்றால் பா.ஜ.க அரசின் ஒரு அங்கமாக தேர்தல் ஆணையம் மாறிவிட்டது.உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி,பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோர் இணைந்து தேர்தல் ஆணையரை தேர்ந்தெடுக்கும் வரை தன்னாட்சி பெற்ற அமைப்பாக சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு தேர்தல் ஆணையம் செயல்பட்டது. ஒன்றிய அரசின் பிரதிநிதிகளாக இருக்கும் நபர்களை வைத்து தேர்தல் ஆணையர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.தேர்தல் ஆணையர் என்ன செய்தாலும் அவர் மீது வழக்கு தொடர முடியாது, என சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது. தேர்தலே தேவையில்லை அனைத்து வாக்கு இயந்திரங்களிலும் எவ்வளவு வாக்குகள் போட வேண்டும் என அவர்களே முடிவு செய்துவிடலாம். அப்படியே அவர்கள் வாக்குப்பதிவு செய்து வருகிறார்கள். அதனால்தான் பாராளுமன்றத்தில் பலர் பேசியுள்ளனர் தேர்தலை வாக்குச்சீட்டு முறையில் நடத்த வேண்டும் என கேட்டுக் கொண்டுள்ளனர்.

தி.மு.க.வை துடைத்தெறிவோம் என அமித்ஷா சொல்வது நடக்கக்கூடிய காரியமே கிடையாது.2026 லும் தமிழக முதலமைச்சராக மீண்டும் மு.க. ஸ்டாலின் அவர்கள் வருவார்கள். தமிழ்நாட்டில் பா.ஜ.க.வின் பாச்சா பலிக்காது. அ.தி.மு.க.,பா.ஜ.க. கூட்டணியில் கீழ் மட்டத்தில் இருக்கும் தலைவர்கள், தொண்டர்கள் நம்பகத்தன்மை இல்லாமல் இருக்கிறார்கள். அ.தி.மு.க.,பா.ஜ.க. கூட்டணியில் உள்ள கட்சிகள் ஒருவருக்கொருவர் ஒற்றுமை இல்லாமல் அடுத்த கட்சிக்கு மரியாதை அதிகமாகி விடக்கூடாது என்ற நிலையிலேயே உள்ளனர்.தமிழகத்தில் முதலமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்ட சீரிய திட்டங்களுக்காகவே 2026 சட்டமன்றத் தேர்தலில் தமிழக மக்கள் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை வெற்றி பெற வைத்து 2,வது முறையாக முதலமைச்சராக்கு வார்கள்.

இவ்வாறு சட்டப்பேரவை தலைவர் மு அப்பாவு தெரிவித்தார்.




முத்தமிழ்ப் பேரவை விருது வழங்கும் விழா

நாள் : (15.12.2025) திங்கட்கிழமை மாலை 5.00 மணிக்கு இடம் : திருவாவடுதுறை டி.என். ராஜரத்தினம் கலையரங்கில் R.A.புரம் சென்னை - 28

வரவேற்புரை :

இயக்குனர் திரு பி.அமிர்தம் அவர்கள்

செயலாளர், முத்தமிழ்ப் பேரவை

கலைஞர்களுக்கு விருதுகள் வழங்கி விழா சிறப்புரை:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்

முன்னிலை :

திரு. G. ராமானுஜம் அவர்கள்

தலைவர், முத்தமிழ்ப் பேரவை

நன்றியுரை :

பத்மஶ்ரீ கலைமாமணி டாக்டர் சீர்காழி. கோ.சிவசிதம்பரம் அவர்கள்

விருது பெறும் கலைஞர்கள்

“கலைஞர்” விருது - நடிகர் திரு. M.நாசர் அவர்கள்

“ராஜ ரத்னா” விருது - வடுவூர் திரு. எஸ்.என்.ஆர். கிருஷ்ணமூர்த்தி அவர்கள்

“இயல் செல்வம்” விருது - திருவாரூர் புலவர் இரெ. சண்முகவடிவேலன் அவர்கள்

“இசைச்செல்வம்” விருது - திருமதி காயத்திரி வேங்கடராகவன் அவர்கள்

“நாட்டியச்செல்வம்” விருது - திருமதி அனிதாகுஹா அவர்கள்

“நாதஸ்வரச்செல்வம்” விருது - திரு மெய்ஞானம் சகோதரர்கள் அவர்கள்

திரு. T.K.R. ஐயப்பன் அவர்கள்

திரு. T.K.R. மீனாட்சிசுந்தரம் அவர்கள்

“தவில்செல்வம்” விருது - நாங்கூர் திரு.N.K.செல்வகணபதி அவர்கள்

“மிருதங்கச்செல்வம் ” விருது - தஞ்சாவூர் K.திரு முருகபூபதி அவர்கள்



அனைவரையும் வருக வருக என வரவேற்கிறோம் !!!!